[31st August 1961

Scholarships (Depressed and Backward Classes)

*1562 Q.—SRI S. M. ANNAMALAI: கனம் பொதுமராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் வழங்கப்படும் உபகாரச் சம்பளத் திட்டம் செயல்படும் முறையைக்குறித்து மத்திய சர்க்கார் மாநில சர்க்காரை கேட்டுள்ளார்களா?

(இ) அப்படியானால், சர்க்கார் அனுப்பிய பதில் என்ன?

THE HON. SRI P. KAKKAN : (அ) and (இ) : In April this year, the Government of India enquired whether there was delay in the sanction and disbursement of Government of India scholarships in this State. The arrangements made for the expeditious disbursement of the Government of India scholarships were explained to them and they were informed that the delay has been reduced to the minimum during 1960-61.

SRI S. M. ANNAMALAI : சில சமயங்களிலே செத்தவர்களுக்குக்கூட உபகாரச் சம்பளம் கொடுப்பதாக சொல்லப்படுகிறதே, அப்படி என் தவறுகள் நடக்கின்றன? மத்திய சர்க்காரிடமிருந்து இம்மாதிரி குறைபாடுகளைத் தவிர்க்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI P. KAKKAN : மாணவர்கள் ஸ்காலர்ஷிப் வேண்டுமென்று விண்ணப்பம் செய்கிறார்கள். திடீரென்று அவர்கள் இறந்துவிட்டால் இறந்ததைப்பற்றி தெரிவித்தால்தான் நாங்கள் அதை நிறுத்த முடியும். ஸ்காலர்ஷிப் போவதற்கு முன்பு அவர் இறந்தால் நாங்கள் என்ன செய்வோம்.

SRI P. G. MANICKAM : நமது மாகாண சர்க்கார் பெற்றோர்களுடைய வருமானம் ரூபாய் 1,200 இருக்கவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். இந்திய சர்க்காரோ 1,600 அல்லது 2,000 என்று குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவருகிறது. நமது மாநிலத்திலே பெற்றோர்களுடைய வருமானம் எந்த அளவுக்கு குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அதே அளவையே இந்திய சர்க்காரும் ஏற்றுக் கொள்ளும்படி நமது மாகாண சர்க்கார் சிபாரிசு செய்வார்களா?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது நமது நிதி அமைச்சர் அவர்கள் ஒரு ஆலோசனையை மத்திய சர்க்காரின் கல்வி மந்திரிக்கு எழுதி இருக்கிறார்கள். அதன்படி ரூபாய் 1,500-லிருந்து ரூபாய் 6,000-க்குள் உள்ள வருமானத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு நமது மாநிலத்திலே எந்தக் கண்டிஷன்படி கொடுக்கிறோமோ, அதன்படியே அவர்கள் ஒத்துக்கொண்டால் கொடுக்கிறோம் என்று எழுதியிருக்கிறார்கள். ஆனால் பதில் இன்னும் வரவில்லை.

SRI M. KALYANASUNDARAM : காலதாமதமாக போய்ச்சேருவது ஒருபுறமிருக்க, இந்த ஸ்காலர்ஷிப்புகள் வழங்குவதிலே பல ஒழுங்கீனங்கள் ஏற்படுகின்றன. ஆடிட் ரிப்போர்ட்டுகளும் வருஷா வருஷம் இந்த நிலைமையைப்பற்றி குறை கூறுகின்றனவே. பப்ளிக் அக்கவுண்ட்ஸ கமிட்டியிலும் சில சிபாரிசுகள் செய்திருக்கிறார்களே, அவற்றையெல்லாம் சர்க்கார் பரிசீலனை செய்தார்களா? மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI P. KAKKAN : ரிப்போர்ட்டைப் பார்த்தபிறகு பரிசீலனை செய்வதற்காக சம்பந்தப்பட்ட செயலாளர் அவர்களையும் டைரெக்டர் அவர்களையும் கேட்டிருக்கிறேன்.

SRI R. SRINIVASA IYER : சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ஸ்காலர்ஷிப்புக்கும் மாகாண கவர்ன்மெண்ட் ஸ்காலர்ஷிப்புக்கும் தொகையிலே வித்தியாசம் இருப்பதாகத் தெரிகிறது. ஒவ்வொரு மாணவனும் மத்திய

31st August 1961]

சர்க்கார் ஸ்காலர்ஷிப்புக்கும் மாநில சர்க்கார் ஸ்காலர்ஷிப்புக்கும் விண்ணப்பம் செய்து கொள்ளுகிறார். அந்த இரண்டிற்கும் தொகையில் வித்தியாசமில்லாமல் செய்வதற்கும், மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் ஸ்காலர்ஷிப் இரண்டிற்கும் மனுப் போட்டால் ஒரே இடத்தில் அதை பைசல் பண்ணிப்பட்டுவாடா செய்வதற்கும் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI P. KAKKAN : மாணவர்கள் இரண்டு ஸ்காலர்ஷிப்புகளுக்கும் விண்ணப்பம் செய்கிறார்கள். எது ஜாஸ்தியாக இருக்கிறதோ அதை வாங்கிக் கொண்டு குறைச்சலாக இருப்பதை விட்டுவிடுகிறார்கள். ஆகையால் நமது நிதி அமைச்சர் அவர்கள் நமது மாநிலத்தில் ஸ்காலர்ஷிப் எவ்வாறு கொடுக்கப்படுகிறதோ அந்த அடிப்படையில் ரூபாய் 1,500-லிருந்து ரூபாய் 6,000-க்குள் வருமானத்தைக் கவனித்துக் கொடுப்பதற்கு ஒத்துக் கொண்டால் கொடுக்கிறோம், என்று எழுதியிருக்கிறார்கள். அங்கிருந்து உத்தரவு வந்த பிற்பாடு ஏற்பாடு செய்ய வேண்டும்.

SRI A. GOVINDASAMY : பின்தங்கிய மாணவர்களுக்கு ராஜ்ஜிய சர்க்கார் கொடுக்கிற சம்பளச் சலுகையோடு மத்திய சர்க்கார் சம்பள சலுகையையும் சேர்த்துக் கொடுக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : மத்திய சர்க்கார் சில கண்டிஷன்கள் பிரகாரம் கொடுக்கிறார்கள். மாநில சர்க்கார் சில கண்டிஷன்கள் பிரகாரம் கொடுக்கிறார்கள். மத்திய சர்க்கார் சொன்ன கண்டிஷன் பிரகாரம் மத்திய ஸ்காலர்ஷிப்புகள் கொடுத்து வருகிறோம்.

SRI R. KRISHNASWAMI NAIDU : மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்காருக்கும் விண்ணப்பித்துக் கொண்டாலும்கூட, இரண்டு விண்ணப்பங்களும் மாநில ஹரிஜன டைரெக்டர் ஆபீசுக்கு வந்து அவர்களே பரிசீலனை செய்து இந்த ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்பது உண்மையா ?

THE HON. SRI P. KAKKAN ; மத்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப்பை டைரக்டர் பரிசீலனை செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறார். மற்ற ஸ்காலர்ஷிப்பைப் பொறுத்த வரையில், வெகு துரிதமாகக் கொடுக்க வேண்டும் என்பதற்காக அந்தந்த ஜில்லாவிலுள்ள ஹரிஜன நல அதிகாரியே பரிசீலனை செய்து கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI S. RAMALINGA PADAYACHI : மத்திய அரசாங்க ஸ்காலர்ஷிப் கிடைப்பதற்கு மொத்தம் 360 மார்க்குக்கு மேல் இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. சில பேர்கள் 360 மார்க்குக்குக் குறைவாக வாங்குவதால் அவர்களுக்கு மத்திய அரசாங்க ஸ்காலர்ஷிப் கிடைப்பதில்லை. அம்மாதிரி நிலைமையில் மாநில அரசாகத்திற்கு விண்ணப்பம் செய்யாவிட்டாலும், மாநில அரசாங்கம் கொடுக்க முடியுமா அல்லதுஅந்த விண்ணப்பம் தள்ளப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : மத்திய அரசாங்கத்திலே பின்தங்கிய மாணவர்கள் 60 சதவிகிதம் மார்க்குகள் எடுக்க வேண்டுமென்று கண்டிஷன் வைத்திருக்கிறார்கள். அங்கே கிடைக்காதவர்களுக்கு நமது மாநில அரசாங்கத்தார், நமது நிதி நிலைமைக்குத் தகுந்தவாறு கொடுப்பதற்கு உதவி செய்து வருகிறோம்.

SRI K. R. VISWANATHAN : நமது நிதி அமைச்சர் அவர்கள் வருமான வரம்பு ரூபாய் 1,500-லிருந்து 6,000 வரை இருக்கலாமென்று மத்திய சர்க்காருக்கு எழுதி இருப்பதாகச்சொன்னார்கள். அப்படியானால்நமது சென்னை சர்க்காரிலே வருமான வரம்பு ரூபாய் 1,200 என்று இருக்கிறதே அதை 1,500 ஆக உயர்த்துவதற்கு நமது அரசாங்கம்-முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : ஹரிஜன நல கமிட்டி, பாக்வார்டு கிளாஸஸ் கமிட்டி, இந்த வருமானத்தை ரூபாய் 1,500–ஆக வைக்க வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். பின்னர் பரிசீலனை செய்து முடிவெடுக்கப்படும்.

[31st August 1961

SRI A. GOVINDASAMI : நமது மாநில சர்க்கார் ஸ்காலர்ஷிப் வாங்குவதற்கு பின்தங்கிய மாணவர்கள் 50 சதவிகிதமும், மிகவும் பின்தங்கிய மாணவர்கள் 45 சதவிகிதமும் வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அதே 5 மார்க்குகள் குறைவாக பின்தங்கிய மாணவர்களும் வாங்கினால் போதும் என்ற கருத்தை நமது சர்க்கார் ஒப்புக் கொள்வார்களா?

THE HON. SRI P. KAKKAN : இதிலே பின்தங்கிய மாணவர்கள், மிகவும் பின்தங்கியவர்கள் என்ற பிரச்னை எழவில்லை. மத்திய சர்க்காரைப் பொறுத்த வரையில் எல்லோரையும் பின்தங்கிய மாணவர்களாகத்தான் கருதுகிறோம்.

Conference of Block Development Officers

*1563 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961 ஏப்ரல் மாதத்தில் சமுதாய அபிவிருத்தி அதிகாரிகளின் கூட்டம் சென்னையில் கூடியதா ?

(இ) அதில் என்ன முடிவுகள் செய்யப்பட்டன ?

THE HON. SRI C. SUBRAMANIAM :—(அ) No, Sir.

(இ) Does not arise.

Block Development Offices

*1564 *Q.*—SRI A. A. RASHEED (on behalf of SRI N.R. THIYAGARAJAN) : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, திண்டுக்கல் தாலூக்கா, ரெட்டியார் சத்திரம் பிளாக் ஆபீஸ் கட்ட டெண்டர் விடப்பட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir.

1565 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் போளூர் சமுதாய நலத் திட்ட அலுவலக கட்டிடத்திற்கு நில ஆர்ஜிதம் எப்போது என்ன விலைக்கு செய்யப்பட்டது ?

(இ) எப்போது பணம் தரப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) The land was acquired on 31st January 1958 at a cost of Rs. 1,311.

(இ) Payment was made on 24th February 1958.

SRI S. M. ANNAMALAI : ஸ்டாப் க்வார்ட்டர்ஸ் கட்டுவதற்கு அக்விசிஷன் செய்யப்பட்ட நிலங்களுக்கு ஏன் இவ்வளவு நாள் காம்பன்சேஷன் கொடுக்கப்படவில்லை. கொடுக்கப்படாததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வி பின்வருமாறு—

" (*a*) when land was acquired for constructing the Block Development Office, Polur, North Arcot district; and the cost of land acquisition; and

(*b*) when the payment was made?"

I have answered it. வேறு நிலத்தைப்பற்றி தகவல் கொடுக்கவேண்டுமென்றால் தனிக்கேள்வி போடவேண்டும்.